# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை** : **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 191 /பேரூ/2024**

**நாள் : 10.02.2025**

திரு. P. முருகானந்தம்,
வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம். …… முறையீட்டு மனுதாரர்

1. செயல் அலுவலர்,
   வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. திரு.எம். வினோத்,
   வத்தலக்குண்டு
   திண்டுக்கல் மாவட்டம் …… எதிர்மனுதாரர்கள்

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு, கதவு எண்.7-4-6 தெற்குத் தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவரது 14.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.09.2024 அன்று பெறப்பட்டு, 191/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு, கதவு எண்.7-4-6 தெற்குத் தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 14.09.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“வத்தலக்குண்டு தெற்குத் தெருவில் 7-2-15ல் வசிக்கும் திரு. முத்தையா மகன் திரு. வினோத் என்பவர் 14.09.2009 அன்று திரு. ஆர். சந்திரன் என்பவரிடம் காலி மனையிடம் கிரையம் பெற்ற இடம் புல எண்.412/பி10ஏ1ஏ1ஏ நிரில் 607 ½ சதுரடி மட்டுமே. மேற்கண்ட காலியிடத்தில் புதிதாக ஆர்.சி.சி. வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அதற்கு அருகில் அரசு

பொது சந்து (6 அடி) கழிவு நீர் பாதையை அடைத்து ஆக்கிரமித்து சுமார் 4x30 அடியில் கட்டடம் கட்டியுள்ளார். இது சம்பந்தமாக வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. கமருதீன் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணியாற்றிய திரு. முரளிமோகன் ஆகியோரிடம் ஆக்கிரமிப்பு கட்டடம் சம்பந்தமாக புகார் அளிக்கப்பட்டு, மேற்படி எதிரிடையாளர்களுக்கு சாதகமாகவும் உறுதுணையாகவும் கையூட்டு பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டனர். இந்நிலையில் திண்டுக்கல் பேரூராட்சி உதவி இயக்குநர் / இயக்குநர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை, இது குறித்து பல்வேறு புகார் மனுக்கள் 2018ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. நாளது தேதிவரையில் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படாமலும், ஆக்கிரமிப்புதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமலும் இருந்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிலையில் திண்டுக்கல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திருமதி. மனோரஞ்சிதம் என்பவர் கடந்த 06.03.2023 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு எனக்கும், செயல் அலுவலர் திரு. கமருதீன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளிமோகன் ஆகியோருக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டதில் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இந்நிலையில் மேற்படி செயல் அலுவலர் திரு. கமருதீன் பணி ஓய்வு பெற்று சென்று விட்டார். விசாரணை செய்யாமல் அவரை துறை ரீதியாக பணி ஓய்வில் விடுவித்தது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது. மேற்கண்ட செயல் அலுவலர் திரு. கமருதீன் மீது சென்னை இலஞ்ச ஒழிப்புத் துறையில் விசாரணை இருந்து வருகிறது. இவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரிய நிலையில், மேற்படி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார். தற்போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திருமதி. மனோரஞ்சிதம் அவர்களும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும், சென்னை மாநில மனித உரிமை ஆணையத்தில் திரு. கமருதீன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் எதிர்மனுதாரர் திரு. வினோத் என்பவர் பழைய கட்டடத்தின் அருகில் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட காலி மனையிடத்தில் சுமார் 650 சதுரடியில் பொதுவில் வைத்து பாகப்பிரிவினை செய்யப்படாமல் இருந்து வந்த சொத்து மற்றும் சில சொத்துக்கள் சம்பந்தமாக நிலக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் (வழக்கு எண்.O.S.No.50) வழக்கு நடைபெற்று முடிவுற்ற நிலையில் எந்தவித ஆவணமும் இன்றி, சட்டத்திற்கு புறம்பாக திரு. வினோத் என்பவர் அத்துமீறி எங்களுடைய இடத்தில் சுமார் 550 சதுரடியில் இரண்டு அடுக்குமாடி கட்டி குடியேறியுள்ளார். மேற்கண்ட இடத்தில் வீடு கட்டுவதற்கு வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்தில் எந்தவித ஆவணமும் இல்லாமல் கையூட்டு பெற்றுக் கொண்டு அனுமதி அளித்துள்ளனர்.

ஆகவே, மேற்படி புதிய கட்டடம் மற்றும் பழைய ஆக்கிரமிப்பு கட்டடம் அனைத்து உரிமங்களையும் ரத்து செய்து அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்தும் இதற்கு உடந்தையாக இருந்து வந்துள்ள வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் கட்டட உரிமையாளர் திரு. வினோத் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு கட்டடத்தை அகற்றிட பணிந்து வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 25.11.2024 மற்றும் 13.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"வத்தலக்குண்டு பேரூராட்சிக்குட்பட்ட 7வது வார்டு தெற்குத் தெரு சர்வே எண்.412பி/10எ1எ1எ உள்ள வீடு மற்றும் காலியிடத்தை திரு. வினோத், என்பவர் வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3648, நாள் 14.09.2009ன்படி கிரையமாக பெற்றுள்ளார். மேற்காணும் இடம் கிழமேல் 30 சதுரடியும், தென்வடல் 20.25 சதுரடியும் ஆக மொத்தம் 607.50 சதுரடி ஆகும். மேற்காணுமாறு கிரையமாக பெற்ற இடத்தில் 80 சதுரடி அளவுள்ள இடத்தில் தென்னங்கீற்று கூரை வீடும், மீதமுள்ள இடம் காலியிடமாகவும் உள்ளது.

மேற்காணும் மொத்த இடமான 607.50 சதுரடி உள்ள இடத்தில் ஏற்கனவே இருந்த கூரை வீட்டை இடித்து விட்டு புதியதாக தரைத்தளம் மற்றும் முதல்தளம் கொண்ட வீடு கட்ட பேரூராட்சி அலுவலக கட்டடம் உரிம விண்ணப்ப எண்.86/2009-2010ன்படி விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, கட்டட உரிம அனுமதி எண்.70/2009-2010, நாள் 19.11.2009ன்படி தலா 459 சதுரடிக்கு மட்டும் தரைத்தளம் மற்றும் முதல்தளம் கட்ட உத்தேச வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 148.50 சதுரடி காலியிடமாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, உரிய வரி விதிப்பு செய்யக்கோரி விண்ணப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டட உரிமம் வழங்கப்பட்ட 459 சதுரடிக்கு மட்டும் தரைத்தளம் மற்றும் முதல் தளத்திற்கு வரி விதிப்பு எண்.8167, 8168ன்படி வரி விதிப்பு செய்யப்பட்டது.

மனுதாரர் திரு. பொன். முருகானந்தம் என்பவரால் வத்தலகுண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்கு அனுப்பப்பட்ட 18.08.2017 நாளிடப்பட்ட புகார் மனுவில் 7வது வார்டு தெற்குத்தெரு சர்வே எண்.1365/10 (பழைய சர்வே எண்.412பி/10/10எ1எ1எ) உள்ள இடத்தில் உள்ள பாதையை ஆக்கிரமிப்பு செய்து திரு. மு. வினோத் என்பவர் கட்டடம் கட்டியுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உரிய விளக்கம் அளிக்கக் கோரி திரு. மு. வினோத் என்பவருக்கு பேரூராட்சி மூலம் 24.08.2017 நாளிடப்பட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

"இதனைத் தொடர்ந்து திரு. மு. வினோத் என்பவர் 30.08.2017 நாளிடப்பட்ட தனது விளக்கத்தில் புகார் மனுவில் தெரிவித்துள்ள 24 சதுரடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட சந்துப் பாதையை தன்னால் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை எனவும், இந்த இடத்தில் எப்போதுமே சாக்கடை வடிகால்தான் செல்கிறது எனவும், தற்போதும் அந்த இடத்தில் சாக்கடை கழிவுநீர் சென்ற வருகிறது எனவும், பொதுமக்கள் யாரும் அந்த இடத்தை நடைபாதையாக எந்த காலத்திலும் பயன்படுத்தவில்லை எனவும், இருப்பினும் வருவாய்த் துறை மூலம் அளந்து அத்துமால் செய்து, அந்த இடத்தில் தன்னால் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்பட்டிருப்பின் உடனடியாக அகற்றிக்கொள்ள சம்மதம் தெரிவித்தும் எழுத்து வாயிலாக சமர்ப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு குறித்து உறுதி செய்ய நில அளவை மேற்கொள்ள வருவாய்த் துறைக்கு 20.11.2024 மற்றும் 03.01.2025 நாளிட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. வருவாய்த்

துறையின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரர்களான திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திரு. மு. வினோத், வத்தலக்குண்டு ஆகியோருக்கு 20.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் 20.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

- திரு. மு. வினோத் என்பவர் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.412/B10A1A1A ல் உள்ள பொது கழிவு நீர் செல்லும் பாதையை ஆக்கிரமிப்பு செய்து 30 அடி நீளமும் மற்றும் 4 அடி அகலம் கொண்ட பரப்பளவில் முறைகேடாக கட்டடம் கட்டியுள்ளார்.
- எங்களது பூர்விக பொது சொத்துள்ள புல எண். 1360 இடத்தில் மேற்படி திரு. எம். வினோத் என்பவர் சுமார் 550 சதுர அடி பரப்பளவை ஆக்கிரமிப்பு செய்து 2 அடுக்குமாடி கட்டடம் கட்டியுள்ளார்.
- மேற்காணும் 2 மாடி கட்டடம் கட்ட எவ்வித ஆவணமும் பெறாமல் திரு. வினோத் என்பவருக்கு வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சியில் கட்டட அனுமதி முறைகேடாக விதிமீறி வழங்கப்பட்டுள்ளது.
- எனவே, கழிவுநீர் பாதையை ஆக்கிரமித்து, கட்டட உரிமம் மற்றும் புதிய 2 அடுக்குமாடி கட்டட உரிமம் ஆகியவை இரத்து செய்ய ஆவன செய்யுமாறும் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஆக்கிரமிப்பாளர் திரு. வினோத் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யவும் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் பணிந்து வேண்டிக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரால் புகாருக்குள்ளான எதிர்மனுதாரரான திரு. எம். வினோத் என்பவர் 20.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:-

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.412/B10A1A1A–இல் பொது கழிவுநீர் செல்லும் பாதையில் 30 அடி நீளமும் மற்றும் 4 அடி அகலமும் கொண்ட பரப்பளவில் முறைகேடாக கட்டடம் என்னால் கட்டப்படவில்லை .
- இருப்பினும் வருவாய்த் துறையால் அளந்து அத்துமால் செய்து கால்வாய் உள்ள இடத்தில் ஏதேனும் என்னால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பின் உடனடியாக அகற்றலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

- மேலும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 550 சதுர அடியில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது குறித்து நான் முறைப்படி வரைபட அனுமதி பெற்றுதான் கட்டடம் கட்டியுள்ளேன் என்பதனையும் இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரான வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திரு. ஆர். சரவணக்குமார் என்பவர் 20.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

- கழிவுநீர் பாதையை ஆக்கிரமிப்பு செய்து திரு. எம். வினோத் என்பவர் கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவரிடம் இருந்து புகார் வரப்பெற்ற நிலையில், அதனை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாறு ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை என தெரிய வருகிறது.
- இருப்பினும் வருவாய்த் துறையால் அளந்து அத்துமால் செய்து கால்வாய் உள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பின் அதனை அகற்ற 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மனுதாரரது பூர்விக இடமான புலஎண். 1360–இல் திரு. எம். வினோத் என்பவருக்கு கட்டடம் கட்ட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை,
- இருப்பினும் மேற்படி புல எண். 1360–இல் ஆக்கிரமிப்பு செய்து ஏதேனும் கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்திடும் வகையில், வருவாய்த் துறையால் அளந்து அத்துமால் செய்து தருமாறு வருவாய்த் துறைக்கு இத்துறையின் 20.11.2024 நாளிட்ட கடிதத்தில் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள் வரை வருவாய்த்துறையால் அத்துமால் செய்து தரப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் இதுகுறித்து விரைவில் வருவாய்த் துறையின் அறிக்கையினை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், புகாருக்குள்ளான எதிர்மனுதாரரான திரு. எம். வினோத் என்பவரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் தனது 14.09.2024 நாளிட்ட முறையீட்டு மனுவிலும் மற்றும் அவரது வாக்குமூலத்திலும் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட தெற்கு தெருவில் வசிக்கும் திரு. எம். வினோத் என்பவர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.412/B10A1A1A–ல் உள்ள பொது கழிவுநீர் செல்லும் பாதையை 120 சதுரடி பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளார் என புகார் தெரிவித்துள்ளார். இது தவிர, மனுதாரருக்கு பூர்வீக சொத்து அமைந்துள்ள புல எண்.1360 இடத்தில் மேற்காணும் திரு. வினோத் என்பவர் சுமார் 550 சதுரடி பரப்பளவு இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து 2 அடுக்குமாடி கட்டடம் கட்டியுள்ளார் என புகாராக தெரிவித்து அதனை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்.412ல் பொது கழிவுநீர் பாதையை ஆக்கிரமிப்பு செய்து 120 சதுரடியில் எவ்வித கட்டடமும் முறைகேடாக தன்னால் கட்டப்படவில்லை எனவும், இதனை வருவாய்த் துறையால் அளவீடு செய்து, ஆக்கிரமிப்பு இருப்பின் உடனடியாக அகற்றலாம் என புகாருக்கள்ளான திரு. வினோத் என்பவர் உறுதிபட தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது. மேலும் திரு. வினோத் என்பவர் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 550 சதுரடியில் கட்டடம் குறித்து, முறைப்படி வரைபட அனுமதி பெற்றுத்தான் கட்டடம் கட்டியுள்ளதாக தெரிவிப்பதையும் திரு. வினோத் என்பவரின் வாக்குமூலம் வாயிலாகவும் தெரிகிறது.

மேற்காணும் மனுதாரரின் புகாரினை குறித்து, புல எண்.412/B10A1A1–ல் பொது கழிவுநீர் பாதையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறியும் பொருட்டு, வருவாய்த் துறை மூலம் அளந்து அத்துமால் செய்து, அவ்வாறு ஏதேனும் ஆக்கிரமிப்பு நடைபெற்றிருப்பின் அதனை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும், அதே போன்று மற்றொரு புகாரான புல எண்.1360ல் கட்டடம் கட்ட திரு. வினோத் என்பவருக்கு எவ்வித கட்டட அனுமதி பேரூராட்சியால் வழங்கப்படாத நிலையில், அவ்விடத்தில் ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளதா என்பதை அறியும் வகையில் வருவாய்த் துறை மூலம் இட அளவீடு செய்து, ஆக்கிரமிப்பு இருப்பின் உரிய நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் கண்டறிய முடிகிறது.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்.412/B10A1A1 மற்றும் புல எண்.1360ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்திடும் வகையில் வருவாய்த் துறை மூலம் இடத்தினை அளந்து அத்துமால் செய்து, அறிக்கையை பெற்று, அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளுமாறு வத்தலக்குண்டு தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. P. முருகானந்தம்,
7-4–6 தெற்குத் தெரு,
வத்தலக்குண்டு – 624 202
திண்டுக்கல் மாவட்டம்

(2) செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

(3) திரு. மு. வினோத்,
வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம்

(4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – **600 028**

(5) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – **600 028**

**நகல்**
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (மு.கூ.பொ.).